செ.வெ.எண்.377 நாள்.11.06.2018.

திருநெல்வேலி மாவட்டம், நாரணம்மாள்புரம் பேரூராட்சியில் கருணை அடிப்படையில் பணி நியமன உத்தரவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், பேரூராட்சி துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (11.06.2018) நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டம், சங்கர்நகர் பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.ஞா.அந்தோணி என்பவர் 10.12.2017 அன்று பணியிட காலஞ்சென்றதால் அன்னாரின் வாரிசுதாரரான மகள் செல்வி.அ.சத்யா என்பவருக்கு கருணை அடிப்படையில் நாரணம்மாள்புரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணி நியமனம் செய்து, பணி நியமன ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் திரு.மு.மாஹின் அபூபக்கர், சங்கர்நகர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கனகராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.